கலைஞர் 100 1924 - 2023

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - *641 003*

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: *94890 56730*

தொலைபேசி: *0422 - 6611302*
நிகரி: *0422 - 2431821*
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,
ஐயா,

தேதி: *16.07.2025*

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## இளமறிவியல் மாணவர் சேர்க்கை 2025–2026

## 7.5 சதவிகித மற்றும் தொழிற்கல்வி பிரிவு இடஒதுக்கீட்டிற்கான முதற்கட்ட சேர்க்கை

இந்த கல்வியாண்டில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கும் (TNAU) மற்றும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் வேளாண்மைப் பிரிவிற்கும் (AU)) ஒரே விண்ணப்பம் வழியாக இளமறிவியல் மாணவர் சேர்க்கை நடைபெறுகிறது.

பொதுப்பிரிவு மற்றும் 7.5 சதவிகித இடஒதுக்கீட்டிற்கான இணையவழி கலந்தாய்வு 09.07.2025 முதல் 15.07.2025 வரை நடைபெற்றது. இணையவழி கலந்தாய்வில் மொத்தம் 12,200 மாணவ/மாணவிகள் பங்கேற்றுள்ளனார். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் 7.5 சதவிகித இடஒதுக்கீட்டில் மொத்தம் 395 இடங்கள் நிரப்பப்பட உள்ளன. அரசாங்க பள்ளியில் ஆறாம் வகுப்பு முதல் பனிரெண்டாம் வகுப்பு வரை பயின்ற தகுதியான மாணவர்களை கொண்டு இந்த இடங்கள் நிரப்பப்பட உள்ளன. 7.5 சதவிகித இடஒதுக்கீட்டிற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவ/மாணவியருக்கு அவர்களுடைய தரவரிசை மதிப்பெண், விருப்பப்பாடம் மற்றும் சாதிய அடிப்படையில் தற்காலிக சேர்க்கை வழங்கப்பட்டுள்ளது.

தொழிற்கல்வி பிரிவு இடஒதுக்கீட்டில் 225 இடங்கள் நிரப்பப்பட உள்ளன. இந்த இடஒதுக்கீட்டிற்க்கும் தகுதியான மாணவ / மாணவியர்களின் தரவரிசை மதிப்பெண், விருப்பப்பாடம் மற்றும் சாதிய அடிப்படையில் தற்காலிக சேர்க்கை வழங்கப்பட்டுள்ளது.

அவ்வாறு, தற்காலிகமாக தேர்வு பெற்ற மாணவ / மாணவியர், அவர்களுடைய அசல் கல்விச் சான்றிதழ்களான 10–ம் மற்றும் 12 –ம் வகுப்பு மதிப்பெண் பட்டியல், சாதிச் சான்றிதழ் (Community Certificate) மற்றும் மாற்றுச் சான்றிதழ் (Transfer Certificate) ஆகியவற்றுடன் கோவை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக வளாகத்தில் (அண்ணா அரங்கம்) 19.07.2025 அன்று காலை 9.00 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை நடைபெறவுள்ள சான்றிதழ் சரிபார்ப்பில் கலந்து கொண்டு அவர்களுடைய சான்றிதழ்களை சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இத்தகவல் தற்காலிகமாக தேர்வு செய்யப்பட்ட மாணவ/மாணவியர்களுக்கு அவர்கள் பதிவு செய்த மின்னஞ்சல் (email) முகவரி மற்றும் அலைபேசி எண்ணிற்கும் அனுப்பப்பட்டுள்ளது. தேர்வு செய்யப்பட்ட மாணவ/மாணவியர்களின் பட்டியல் http://tnau.ucanapply.com என்ற இணையதளத்திலும் வெளியிடப்பட்டுள்ளது.

**மேலும் விவரங்களுக்கு**

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயமுத்தூர்:**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக கல்வி பாடங்களுக்கான விவரங்களை 9488635077, 9486425076 என்ற அலைபேசி எண்களிலும் மின்னஞ்சல் (email): ugadmissions@tnau.ac.in மூலமாகவும் வார நாட்களில் காலை 9.00 மணியிலிருந்து மாலை 5 மணிவரை தொடர்புகொள்ளலாம்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**